
***பின்வரும்   தகவல்_____ மொழியில் உள்ளது, ஆனால் மேலும் தகவல் தொடர்புகளுக்கு ஆங்கில மொழியை தயவுசெய்து உபயோகிக்கவும்***

# முடி உதிர்வு மற்றும் முடி மாற்று அறுவை சிகிச்சை குறித்த பொதுவான விவரங்கள்

## 1) நீங்கள் ஏன் முடியை இழக்கிறீர்கள்?




அமைப்புமுறை முடி உதிர்தல் உங்களுடைய மண்டையின் முன் மற்றும் மத்தியப் பகுதியை மட்டுமே பாதிக்கிறது. மரபுரீதியாக இந்தப் பகுதியில் உள்ள உங்களுடைய முடி ஹார்மோன்கள் உணர்திறன் மிக்கது. இந்த முடிகள் ஒரு குறிப்பிட்ட அமைப்புமுறையில் மெதுவாக மெலிந்து

இறந்துவிடுகின்றன. மரபுரீதியாக வலிமையான பின்புறத்திலும் பக்கவாட்டிலும் உள்ள முடிகள் நிரந்தரமாக உள்ளன. இந்த நிரந்தர முடியின் வேர்களை (ஃபாலிக்குலார் அலகுகள்) பயன்படுத்தி நீங்கள் முடியை இழந்த இடத்தில் நாங்கள் பொருத்துகிறோம்.

## 2) சிகிச்சைகள் எவ்வாறு உதவுகின்றன?











உங்கள் முடியின் வேர் உயிருடன் இருக்கும் வரை மோனாக்ஸிடில் மற்றும் ஃபினஸ்டெரைடு போன்ற **மருந்துகள்** மெலிந்த **முடியின் தரத்தை உயர்த்தி வழுக்கையின் முன்னேற்றத்தைத் தடுக்க உதவ முடியும்.** ஆனால் **உங்களுடைய முடியின் வேர்கள் இறந்துபோன இடத்தில் எந்த மருந்தும் புதிய முடியை உற்பத்தி செய்ய முடியாது**. அந்தப் பகுதியில் முடியை வளர்ப்பதற்கான ஒரே தீர்வு முடி மாற்று அறுவை சிகிச்சை மட்டுமே ஆகும்.

# 3) முடி மாற்று அறுவை சிகிச்சையின் செயல்முறை?




நாங்கள் அளிக்கும் ஃபாலிக்குலார் முடி மாற்று அறுவை சிகிச்சை உங்களுடைய தோற்றத்தை மாற்ற உங்களுக்கு உதவ முடியும். **இது இயற்கையான தோற்றத்துடன், நிரந்தரமாக வளரக்கூடியதும் பராமரிப்புத் தேவையற்ற நீண்ட**

**வளர்ச்சி கொண்டதும் ஹார்மோன்களின் விளைவாக மெலிந்து வளராத தன்மை கொண்டதாகவும் வளர்கிறது. சிறப்புக் கவனம் தேவைப்படாத இந்த முடியை நீங்கள் வெட்டவும், வண்ணமிடவும் மற்றும் நாகரிகப்படுத்தவும் முடியும். நீங்கள் அவற்றை சீவிக்கொள்ள முடியும், ஷாம்பூ பயன்படுத்த முடியும் மற்றும் எண்ணெயிட முடியும் மற்றும் நீங்கள் அவற்றை முறையாக மழுக்கக் கூட முடியும்.** நடப்பட்ட முடிகள் தொடர்ந்து உயிர்வாழ்வதற்காக மருத்துவம் தேவையில்லை.

முடி மாற்று அறுவை சிகிச்சை என்பது வழக்கமாக ஒரு நாள் செயல்முறை மற்றும் இது ஒரு உணர்வுறுப்பு மயக்க மருந்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. மருத்துவமனையில் தங்கியிருத்தல் அல்லது கட்டுப்போடுதல் போன்ற தொந்தரவுகள் இல்லை. இது மிகவும் வசதியான அமைப்பில் ஒரு திறந்தவெளி செயல்முறையாக மேற்கொள்ளப்படுகிறது.

## 4) செயல்முறை நேரம்:

இது நடக்கூடிய முடிகளின் எண்ணிக்கைக்கேற்ப 2 முதல் 8 மணி நேரங்கள் எடுத்துக்கொள்ளலாம். இது மிகவும் வசதியான அமைப்பில் ஒரு திறந்தவெளி செயல்முறையாக மேற்கொள்ளப்படுகிறது. அஹமதாபாத்தில் 2-3 இரவுகள் தங்குவதற்கு நாங்கள் பரிந்துரைக்கின்றோம்.

# 5) எவ்வளவு சீக்கிரம் நீங்கள் உங்கள் வேலையில் சேர முடியும் அல்லது நீண்ட தூரத்துக்கு விமானத்தில் செல்ல அல்லது பயணிக்க முடியும்?

நன்று, வழக்கமாக துண்டு முறை அல்லது எஃப்யூஇ செயல்முறைக்குப் பிறகு ஒரு நாள் ஓய்வே போதுமானது.

எஃப்யூஇ-க்குப் பிறகு 5-7 நாட்களுக்கும் துண்டு செயல்முறைகளுக்குப் பிறகு 3-4 வாரங்களுக்கும் உடற்பயிற்சி, ஜிம், நீச்சல், உடலுறவு, விளையாட்டு போன்றவற்றை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

செயல்முறையின் அடுத்த நாள்களில் நீங்கள் நெடுந்தொலைவு விமானத்தில் பறக்க முடியும்.

## 6) உங்கள் தலையில் ஏதோ ஒன்று செய்யப்பட்டிருக்கிறது என்று யாராவது எப்போது கூற முடியும்?




நன்று, கசடுகளை (உலர்ந்த இரத்தம்) சுத்தம் செய்வதற்கு 7 முதல் 10 நாட்கள் வரை ஆகும். 1 மற்றும் ½  அங்குலம்

நீளமுடைய கொடையாளர் முடிகளை நீங்கள் பெற்றிருந்தால் துண்டு செயல்முறையின் தையல்களை மறைக்க முடியும். நீங்கள் வெண்ணிற அல்லது தெளிவான தோலைப் பெற்றிருந்தால் முடி மாற்று அறுவை சிகிச்சைப் பகுதி 3-6 வாரங்களுக்கு நீடித்திருக்கும் மற்றும் நீங்கள் சூரிய ஒளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். இந்தக் காலத்தில் நீங்கள் ஒரு தொப்பியை அணிய முடிந்தால் செயல்கள் யாருக்கும் தெரியாமலே போய்விடும்.

## 7) எந்த முறை சிறந்தது, புதிய எஃப்யூஇ முறையா அல்லது பழைய துண்டு முறையா?





நம்முடைய பார்வையில் சமீபத்திய சான்றுகளிலிருந்து முடி மாற்று அறுவை சிகிச்சையில் 2 முறைகள் உள்ளன: **எஃப்யூஇ முறையானது துண்டு முறையை விட தலைசிறந்த முறையாக உள்ளது** என நாங்கள் உறுதியாக நம்புகிறோம் மற்றும் இது எதிர்காலத்துக்கான முறை ஆகும்.


**1. எஃப்யூஇ அல்லது டிஹெச்ஐ (நவீன தொழில்நுட்பம் - தையலற்ற முறைகளுடன்)** (சமீபத்திய முன்னேற்றங்களுடன் இந்த நவீன மற்றும் தையலற்ற முறை தலையின் பின்புறம்

ஒரு நேரான தழும்பை ஏற்படுத்துவதில்லை ஆதலால் விரைவாகக் குணமடைகிறது மற்றும் இது நடைமுறையில் அறுவை சிகிச்சைக்குப் பின் வலியில்லாதது. இறுதி விளைவு சிறப்பானதாக உள்ளது). பிடுங்குவதற்கு ஆழக் கட்டுப்பாட்டுடன் கூடிய 0.75 முதல் 1 மிமீ நுண்ணிய துளையிடும் கருவியையும் லாரன்சோ தொழில்நுட்பத்தையும் நாங்கள் பயன்படுத்துகிறோம். இந்த முறையின் மூலம் தாடி, மார்பு, முதுகு போன்ற பகுதிகளில் நல்ல தரத்துடன் இருக்கும் முடிகளையும் நாங்கள் பிடுங்க முடியும்.

**வீடியோவை பார்க்கவும்**:

http://www.youtube.com/watch?v=GU3d0je6yZU&feature=related




**2. பழைய தொழில்நுட்பமான எஃப்யூஹெச்டி அல்லது துண்டு முறை** ஒரு பாரம்பரிய முறை ஆகும். இது உங்களுடைய தலையின் பின்பக்கத்திலிருந்து ஒரு துண்டு தோலை வெட்டும் செயல்முறையைக் கொண்டுள்ளதால் பின்புறம் தையலிட

வேண்டியுள்ளது மற்றும் அது அங்கு ½ முதல் 1 அடி நீளமுள்ள நேரான தழும்பை ஏற்படுத்துகிறது. இது குட்டையான சிகையலங்காரத்தை அனுமதிப்பதில்லை, எனவே ஒருவர் கட்டாயமாக நீண்ட தலைமுடியை வைத்திருக்க வேண்டும். பின்பக்கத்தில் நீண்ட வெட்டு மற்றும் தையல்களின் காரணமாக குணமாக நீண்டகாலம் ஆகிறது. இந்தச் செயல்முறையின்போது அதிக இரத்த இழப்பு ஏற்படுகிறது. சுமார் 10% பேர் வலியுடன் கூடிய தழும்பு, இறுகிய மண்டை மற்றும் மண்டையில் உணர்விழப்பு ஆகியவற்றை பல மாதங்களுக்கு அல்லது நிரந்தரமாகக் கூட பெறுகிறார்கள் மற்றும் அந்தத் தழும்பு அகலமாவதால் நீண்ட முடிகளைக் கொண்டு கூட அதை மறைக்க முடிவதில்லை. மண்டை இறுக்கமாக இருந்தால் பக்க விளைவுகள் அதிகமாக இருக்கிறது. இந்த முறையில் நரைமுடி அல்லது சாம்பல் நிறமுடைய முடிகளைப் பிரிப்பது கடினம். தையல்களின் காரணமாக ஒரு மாதத்துக்கு உடற்பயிற்சி, நீச்சல், விளையாட்டு, ஜிம் மற்றும் உடலுறவு போன்றவற்றை நீங்கள் தவிர்க்க வேண்டியுள்ளது. இந்த முறை அருவருக்கத்தக்க தழும்புகளை ஏற்படுத்துவதால் இது உடலிலுள்ள முடிகளை நீக்கப் பயன்படுத்துவதில்லை.

**வீடியோவை பின்வரும் வலைத்தளத்தில் பார்க்கவும்:**

http://www.youtube.com/watch?v=mYnzZ2y0GH4&feature=related

**எஃப்யூஇ ஆனது விலையுயர்ந்ததாக இருந்தாலும் கூட எஃப்யூடி (துண்டு முறை)-ஐ விட மிகச் சிறந்தது என்பதை நாங்கள் இப்பொழுது உறுதியுடன் நம்புகிறோம். எனவே நாங்கள் இப்பொழுது தையலற்ற எஃப்யூஇ முறையை**

மட்டுமே அளிக்கிறோம்.


**2 முறைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளில் முக்கியமானது தலையின் பின்பகுதியிலிருந்து வேர்களைப் பிடுங்குதல் மற்றும் ஒட்டவைக்கும் முறை மற்றும் முடி இழந்த பகுதியில் (பெறும் பகுதியில்) இரண்டு முறைகளுக்குமான விளைவு ஒரே மாதிரியானது. செலவுத் தொகையைத் தவிர எஃப்யூஇ-ஆனது எஃப்யூடி-ஐ (துண்டு முறை) விட மிகச் சிறந்த முறை என்பதை இப்பொழுது நாங்கள் பலமாக நம்புகிறோம்.**

## 8) இச்செயல்முறையில் ஏதேனும் பக்கவிளைவுகள் உள்ளனவா?குணமடைதல் மற்றும் பிந்தைய கவனிப்பு:

செயல்முறைக்குப் பிறகு சிறிது வீக்கம் மற்றும் கசடுகள் ஏற்படுவது இயல்பானது. புகையிலையைப் பயன்படுத்துதல் தோலுக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தைக் குறைத்து உங்களுடைய முடி வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதால் குணமடையும் காலத்தின்போது நீங்கள் அதைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டியிருக்கலாம். உணவுக் கட்டுப்பாடுகள் ஏதும் கிடையாது. அடுத்த நாளிலிருந்து 10 நாட்களுக்கு (மருத்துவமனையால் கொடுக்கப்பட்ட) தெளிப்பான் மூலம் முடியைக் கழுவுதல் அவசியமானது. அசடுகள் ஒரு வாரத்துக்குப் பிறகு விழ ஆரம்பிக்கிறது மற்றும் நடப்பட்ட முடிகளும் இதனுடன் சேர்த்து விழுந்துவிடுகின்றன, ஆனால் பொருத்தப்பட்ட முடிகளின் ஸ்டெம் செல்கள் ஒரு வாரத்துக்குள் எடுக்கப்படுகின்றன, இவை வழக்கமாக 3-6 மாதங்களுக்குள் வளர ஆரம்பிக்கும்

புதிய முடிகளை உருவாக்குகின்றன. முடியானது 8-12 மாதங்களுக்குள் சீவக்கூடிய நீளம் அடைகிறது மற்றும் ஒன்று முதல் ஒன்றரை வருடங்களுக்குள் முழுமையான விளைவை எதிர்பார்க்க முடியும். முன்பகுதியில் உள்ள முடிகளுடன் ஒப்பிடும்போது உச்சிப்பகுதியில் நடப்பட்ட முடிகள் ஒன்று முதல் ஒன்றரை மடங்கு காலம் அதிகமாக எடுத்துக்கொள்கிறது.

# 9) கட்டணம்:



## The Total cost in Indian Rupees
## FUE / BHT are Stitch less procedure
## FUT is procedure with stitches and a linear scar at the back

| Number of Grafts | FUE or BHT ( Rs. 75/ Graft) | FUT ( Rs. 35/ Graft) |
|---|---|---|
| 500 | 41363 | 19303 |
| 600 | 49635 | 23163 |
| 800 | 66180 | 30884 |
| 1000 | 82725 | 38605 |
| 1200 | 99270 | 46326 |
| 1400 | 115815 | 54047 |
| 1600 | 132360 | 61768 |
| 1800 | 148905 | 69489 |
| 2000 | 165450 | 77210 |
| 2200 | 181995 | 84931 |
| 2400 | 198540 | 92652 |
| 2600 | 215085 | 100373 |
| 2800 | 231630 | 108094 |
| 3000 | 248175 | 115815 |
| 3500 | 289538 | 135118 |
| 4000 | 330900 | 154420 |
| 4500 | 372263 | 173723 |
| 5000 | 413625 | 193025 |
| 5500 | 454988 | 212328 |
| 6000 | 496350 | 231630 |
| 6500 | 537713 | 250933 |

**The cost ( mentioned here) includes:**

1. Surgeon's Fee
2. Operation Charges
3. Operation theatre charges
4. Anesthetic medications
5. Disposables
6. !0.3% GST I from Sept. 2009
7. Post Op care Kit
8. Pre op Routine Blood test: ( Rs. 900)

**LHT ( Long Hair Transplant)** will cost Rs. 50/ Graft ( instead of Rs. 35/ Graft) and will have stitches at the back

**FUE without shaving:** will cost Rs. 100 /graft ( instead of Rs. 100 / graft) and there is a limit of number of grafts and you need to keep your door hair long for some times before procedure

For booking the date Rs. 20000 is deposited as advance and the balance is payable at the time of procedure before the beginning of procedure

இந்தச் செயல்முறையின் செலவு உங்களுக்குத் தேவைப்படும் முடி வேர்களின் (நடப்பட்டவைகள்/ ஃபாலிக்குலார் அலகுகள்) எண்ணிக்கையைச் சார்ந்துள்ளது. துண்டு முறையில் (எஃப்யூடி) ஒரு நடப்பட்ட முடிக்கு ரூ.35-ம் எஃப்யூஇ (தையலற்ற முறை) முறையில் ஒரு நடப்பட்ட முடிக்கு ரூ.75-ம் செலவாகிறது. ஒரு ஃபாலிக்குலார் அலகு அல்லது நடப்பட்ட முடிகளிலிருந்து 1 முதல் 4 முடிகள் வரை

வளரும்.

**நடப்பட்ட முடிகளின் எண்ணிக்கை மற்றும் அதனுடைய செலவு கீழுள்ள விளக்கப்படத்திலுள்ள முடி உதிர்வு முறைக்கேற்பக் கொடுக்கப்பட்டுள்ளது.**

மேலுள்ள அறுவை சிகிச்சைச் செலவு அறுவை மருத்துவரின் கட்டணம், உதவியாளர் கட்டணம், அறுவை அரங்குக் கட்டணங்கள், அறுவை அரங்கு மயக்க மருந்து மற்றும் பிற செலவுகளை உள்ளடக்கியது. 10.3% **அரசு வரி** பொருந்தும். இரத்தப் பரிசோதனைகள் மற்றும் அறுவை சிகிச்சைக்கு முந்தைய பாதுகாப்புக் கருவிகளுக்கு மேலும் 2500 செலவாகும்.

பணம்கடன் அட்டை (இடைநிலை இழப்புகளுக்காக 2.5% ஐச் சேர்க்கவும் & உங்களுடைய புகைப்படத்துடன் கூடிய அடையாள ஆவணம் தேவைப்படும்)

வெஸ்டர்ன் யூனியன் (3% கட்டணத்தைச் சேர்க்கவும்)

வங்கியின் பணமாற்றம்

பேபால் (4.5% ஐ சேர்க்கவும்)

துண்டு முறையில் தானம் கொடுக்கும் தளத்தின் “டிரைக்கோஃபைட்டிக் மூடுதல்”-க்கு கூடுதலாக **ரூ.**10000 செலவு பிடிக்கும்.  இது நீங்கள் அதைச் செய்யத் தேர்ந்தெடுத்தால் மட்டுமே. இது வழக்கமான முறையின் ஒரு பகுதி அல்ல.

(http://www.goodbyehairloss.com/trichophytic-closure.htm)உங்களுடைய தானம் கொடுக்கும் தழும்புகள் வழியாக நீங்கள் முடியை வளர்க்கக்கூடிய தானம் கொடுக்கும்

தளத்தின் டிரைக்கோஃபைட்டிக் மூடுதல்

(http://www.goodbyehairloss.com/trichophytic- closure.htm). வழக்கமான மூடுதல் முறையில் தையல் அடையாளத்தின் வழியாக முடி வளர்வதில்லை. எனவே முடிகள் நீளமாக வைக்கப்படவில்லை எனில் டிரைக்கோஃபைட்டிக் மூடுதல் சாதாரண மூடுதல் ஈஎஸ்பி-ஐ விட சிறந்த மறைத்தலைப் பெற்றுள்ளது.

## 10) முடிவு & உத்திரவாதம்?

நன்று, நடப்பட்டதற்குப் பிறகு புதிய **வேர்கள்** உடலில் ஒன்றுசேர்வதற்கு 10 நாட்கள் எடுத்துக்கொள்ளும், அதன் பிறகு நடப்பட்ட முடிகள் முதலில் அறுவையின் அசடுகளுடன் சேர்ந்து விழுந்துவிடும். 3-6 மாதங்களில் புதிய முடிகள் வளரத் தொடங்குகின்றன. ஒன்று முதல் ஒன்றரை வருடங்களுக்குள் முழுமையான விளைவு எதிர்பார்க்கப்பட வேண்டும். வெற்றி வீதத்துக்கேற்ப ஒவ்வொரு நோயாளியிலும் நடப்பட்ட முடிகளில் குறைந்தது 85-95% நிச்சயம் வளரும். மருத்துவத் தொழிலில் நாங்கள் எழுத்து மூலமான உத்தரவாதத்தைத் தருவதில்லை ஆனால் நாங்கள் எங்களுடைய முடிவுகளில் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

உண்மையான எதிர்பார்ப்பை வைத்திருப்பது முக்கியமானது. அடர்த்தியை அதிகரிப்பதன் மூலம் அல்லது சொட்டை விழுந்த பகுதிகளை மறைப்பதன் மூலம் முடி மாற்று அறுவை சிகிச்சை உங்களுடைய தற்போதைய தோற்றத்தை முன்னேற்ற முடியும், ஆனால் சில நேரங்களில் அது உங்களுடைய முடியின் உண்மையான அடர்த்தியுடன் பொருந்தாமல் போகலாம். இது உங்களுடைய இள வயதின்

உண்மையான அடர்த்தியைக் கொடுக்காமலோ அல்லது ஒரு திரை நட்சத்திரத்தைப் போன்ற தோற்றத்தை உங்களுக்குக் கொடுக்காமலோ இருக்கலாம், ஆனால் உங்களை சாதாரணமானவராக உருவாக்கி இழந்த நம்பிக்கையை மீண்டும் கொடுக்கிறது. **புகைபிடித்தல்** நடப்பட்ட முடியின் வளர்ச்சிக்கு எதிராகப் பாதிப்பதால் முன்னர் சில நாட்களுக்கும் பின்னர் சில மாதங்களுக்கும் அதைத் தவிர்க்கவும். இறுதி விளைவு அல்லது முடிவு பின்வரும் காரணிகளைச் சார்ந்துள்ளது: 1. நடப்பட்ட முடிகளின் எண்ணிக்கை 2. முடியின் தடிமன் தடிமனான முடி சிறப்பான முடிவைக் கொடுக்கிறது.3. நடப்பட்ட முடிகளின் திசை மற்றும் பரவல். (இது செயல்முறையின் கலைத்திறன் பகுதி மற்றும் முடிவில் இயற்கைத் தன்மையைத் தீர்மானிக்கிறது) 4. முடிக்கு எதிராக தோலின் மாறுபாடு (குறைவான மாறுபாடு சிறந்த முடிவைக் கொடுக்கிறது)

## 11) சிறிது முடியை வெட்டுதல்?

இது பின்வருவனவற்றிற்குத் தேவைப்படுகிறது: 1. பெறும் பகுதியில் துல்லியமான இயற்கைக் கோணம் மற்றும் திசையில் நடுதலை எளிதாக்குகிறது. 2. தற்போதுள்ள முடிகளைப் பாழ்படுத்தாமல் தற்போதுள்ள முடிகளுக்கு இடையே நடுதலை எளிதாக்குகிறது. 3. அறுவை சிகிச்சைக்கு முந்தைய மிக முக்கியமான சுகாதாரத்தைக் கடைப்பிடிக்க வெட்டுதல் உங்களுக்கு உதவுகிறது. 4. தேவைப்படும் நடக்கூடிய முடிகளின் எண்ணிக்கை <1000 என இருந்தால் தவிர எஃப்யூஈ நிலைகளில் மொத்த கொடயளிக்கும் பகுதியை மழுக்குதல் என்பது வழக்கமாக தேவைப்படும் ஒன்றாகும்.

## 13) முடிமாற்று அறுவை சிகிச்சைக்குப் பிறகு நான் மருந்துகள் எடுத்துக்கொள்ள வேண்டுமா & எவ்வளவு காலத்துக்கு?




**நடப்பட்ட முடிகள்** பராமரிப்புக்காக எந்த மருந்துகளும் தேவைப்படுவதில்லை. ஆனால் ஃபினாஸ்டெரைடு மற்றும் மினாக்ஸிடில் போன்ற மருந்துகளைப் பயன்படுத்துவதன் மூலம் உங்களுடைய **நடப்படாத முடிகளை** விழச்செய்யும் டிஹெச்டி செயல்முறையை மெதுவாக்கவோ அல்லது நிறுத்தவோ முடியும்.

## 14) எங்களுடைய முடிவுகளின் காட்சிக்கூடம்:

http://www.goodbyehairloss.com/photo_gallery.htm

## 15)எமது நோயாளியின் நற்சான்றிதழ்கள்:

http://www.goodbyehairloss.com/testimonials.htm

## 16) அறுவை சிகிச்சைக்கான தேதியை எவ்வாறு முன்பதிவு செய்வது:?

ஐசிஐசிஐ வங்கி, எஸ்ஜி ரோடு பிராஞ்ச், அஹமதாபாத், குஜராத், இந்தியா, ஐசிஐசிஐ வங்கி சேமிப்புக் கணக்கு எண். **029501515482, பெயர் பிஷன் மஹாதேவிA (BISHAN MAHADEVIA) என்ற கணக்கில், ரூ.20000 ஐ ரொக்கமாகச் செலுத்தவும் அல்லது அருகில் உள்ள ஐசிஐசிஐ வங்கிக்கு சென்று காசோலையாக தொகையைச் செலுத்தவும் அல்லது இணையதள பரிவர்த்தனை மூலம் தொகையைச் செலுத்தவும்.(அஞ்சல் முகவரி: ஐசிஐசிஐ வங்கி சர்திக் II, தரைத்தளம், எஸ்.ஜி ரோடு, பொடாக்தேவ், அஹமதாபாத்** 380054)

IFSC (இண்டியன் ஃபைனாண்ஷியல் சிஸ்டம் கோட்)குறியீடு: ICIC0000295MICR (மேக்னெடிக் இங்க் கேரக்ட்டர் ரெகக்னைஷன்) குறியீடு: 380229009உங்கள் வங்கி மூலம், சர்வதேச வங்கியிடைப் பணமாற்றீடு செய்ய இந்த இணைப்பில் கொடுக்கப்பட்டவாறு நீங்கள் செய்யலாம்:

சில்லறை பணம் செலுத்துகைக்கான ஐசிஐசிஐ வங்கியின் Swift / BIC குறியீடு: ICICINBBNRI.

**வங்கியிடைப் பணமாற்றீடு பற்றிய மேலும் விவரங்களுக்கு பின்வரும் வலைத்தளத்தைப் பார்க்கவும்:**

http://www.icicibank.com/pfsuser/icicibank/ibank-nri/nrinewversion/money_transfer/money_transfer_others/wire_transfer.htm

பி.கு. எங்களுடைய கொள்கையின் படி பிணையத் தொகையின்றி செயல்முறைக்கான தேதியை நாங்கள் உறுதி செய்வதில்லை. நீங்கள் தொலைவிலிருந்து வரக்கூடும் என்பதால், செயல்முறைக்கான ஒரு உறுதிப்படுத்தப்பட்ட தேதியை நீங்கள் பெற்றிருப்பது சிறப்பானதாக இருக்கும் என நாங்கள் உங்களுக்குப் பரிந்துரைக்கிறோம், ஏனெனில் பதிவு செய்யாமல் வருபவர்களை விட முன்னதாகவே பிணையத் தொகை கொடுத்து தேதியைப் பதிவு செய்திருப்பவர்களுக்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம். நீங்கள் வரும் நாளில் வேறு யாராவது அந்தத் தேதியில் பதிவு செய்திருந்தால் உங்களுடைய அறுவை சிகிச்சையை அந்த நாளில் நாங்கள் மேற்கொள்ள முடியாது. தேதியைப் பதிவு செய்யும்போது நீங்கள் விரும்பும் செயல்முறை வகையை நீங்கள் எங்களுக்குக் கூற வேண்டும் (எஃப்யூடி அல்லது எஃப்யூஇ). வழக்கமாக, ஒரு மாதத்திற்கு முன்பு, நியமனச் சந்திப்பை பெற்றுக் கொள்வது சிறந்ததாகும்.

..................................................................

**17)** அறுவை சிகிச்சைக்கு முன்பான கவனிப்புக்கு: click

http://www.goodbyehairloss.com/before-transplant.htm

..................................................................

**18)** **முடி உதிர்தலைத் தடுப்பதற்கான மேலும் மருந்துகளுக்கு சரிபார்க்கவும்:**

click http://www.goodbyehairloss.com/minoxidil-and-finastride.htm

..................................................................

**19) திங்கள் முதல் வியாழன் வரை மட்டுமே நாங்கள்**

செயல்முறைகளை மேற்கொள்கிறோம் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நாங்கள் ஆலோசனைகளை மட்டுமே வழங்குகின்றோம். சனி மற்றும் ஞாயிறுகிழமைகளில் மருத்துவமனை மூடப்பட்டிருக்கும்.